# NEW MODEL QUESTION PAPER
## TAMIL - Subject Code : (04)
## I PUC
## [Total no of Questions : 60]

**Time : 3 Hours 15 Minutes]** **[Max.Marks :80**

**மாணவர்களின் கவனத்திற்கு :**

1. **கையெழுத்து தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்.**
2. **வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களை சரியாக எழுத வேண்டும்.**
3. **கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்**

## பகுதி - ஒன்று

**அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக:**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்பு டைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடை என்னையும் சேர்த்து எழுதுக:**
**5X1=5**

1. ஒளியாகி வெளியாகி இருப்பவன்

    அ. இறைவன் ஆ. தலைவன்

    இ. தொண்டன் ஈ. மனிதன்

2. இதற்கு அடைக்கும் தாழ் இல்லை

    அ. புகழுக்கு ஆ. அறிவுக்கு

    இ. அன்புக்கு ஈ. பணத்திற்கு

3. கண்ணகிக்கு எந்த விண்மீனை ஒப்பிடுகிறார்________ .

    அ. புதன் ஆ. செவ்வாய்

இ. திங்கள் ஈ. வெள்ளி

4. காளத்தி வேடன்

அ. கண்ணப்பன் ஆ. குகன்

இ. கம்பர் ஈ. பரதன்

5. கூடல சங்கம தேவனை அறிய இதுவே அடிப்படையாம்.

அ. குருநெறி ஆ. பொன்

இ. அடியவர் கூட்டம் ஈ. மண்

**II. கோடிட்ட இடங்களை சரியான விடை தேர்ந்தெடுத்து எழுதுக:**
**5X1=5**

6. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று ___________. (திருக்குறள் / அகநானூறு
7. சிங்கம் பசித்தாலும் துன்புற்றாலும் __________ தின்னாது.(புல்/கல்)
8. தாங்க முடியாத மகிழ்ச்சியில் _________ தலையாட்டுகின்றதே(மரம்/செடி)
9. வயது முதிர்ந்தவள்________ (கிழவி /குமரி)
10. கௌரி பாட்டியின் வயது ___________ (70/80)

**III. பொருத்துக:**
**5X1=5**

11. தாயுமானவர் - புறநானூறு
12. ஔவையார் - அடியவர் கூட்டம்
13. தேவனை அறிய - இறை வாழ்த்து
14. பாரதியார் - திருமால்
15. ஆண்டாள் - கண்ணம்மா என் குழந்தை

**IV. ஓரிரு வரிகளில் விடை எழுதுக:**
**5X1=5**

16. யானை எதனைக் கண்டு அஞ்சும்?
17. கலிங்கத்துப்பரணியில் கணவரைக் கண்டவுடன் மனைவியர் மறந்து விடுவது எதை?
18. மரம் பிச்சையாகப் போட்டது எது?
19. சிறு நாணயத்தின் பெயர் என்ன?

20. கங்கன் தன் தாயிடம் எத்தனை நாட்களில் திரும்புவதாகக் கூறினான்?

## பகுதி - இரண்டு

### பிரிவு - 1

**அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:** **2X2=4**

21. தமிழ் மொழி எப்படித் துலங்கி சுடர வேண்டும் என்கிறார் ?
22. தாளாண்மை பற்றி நாலடியார் கூறும் கருத்து யாது ?
23. எத்தகைய மனிதருக்கு என்றும் இன்பம் கிடைக்கும்?

### பிரிவு - 2

**ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:** **2X2=4**

24. வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? என்று கூறிய வைதீகருக்கு நகை வியாபாரி கூறியவற்றை எழுதுக?
25. எத்தகைய பழக்கத்தைப் பின்பற்றுவது நம் நாட்டவர்க்கு நலம் தரும் என்று தேம்ஸ் நதிகரையில் கட்டுரை ஆசிரியர் கூறுகின்றார்?
26. உலகத்தை ஒரு நாணயச் சாலையோடு ஒப்பிட்டு பசவண்ணர் கூறுவது யாது?

### பிரிவு - 3

**இ. ஏதேனும் ஒன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :** **1X2=2**

27. எதிர்க்குடிசை எல்லப்பன் கரியனிடம் கூறியவற்றை எழுதுக ?
28. உங்கள் வேர்களைத்தேடி வந்தீர்களா? என்று கேட்ட பத்திரிகை நிருபருக்கு மேத்யூநாதன் கூறிய பதிலை எழுதுக:

## பகுதி - மூன்று

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக:**

**3X3=9**

29. “முதிர் கடல் ஞாலம் முழுதும் விளங்கும்
 கதிர் ஒருங்கு இருந்து காட்சி போல!”
30. ‘’வலியதோர் உள்ளம் கொண்டார்
 வாழ்வதில் பெருமை கண்டார்’’
31. “இவரிடம் அறிவு பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மூவாயிரமாகும்!”
32. ‘’இவர்கள் ஆடைகளை நெய்து அரசர்க்கும், வேதியர்க்கும், கடவுளுக்கும் கொடுத்து வந்தனர்’’
33. 'வாசலில் மாட்டைப்பிடித்துக்கொண்டு வேக வேகமாகப் புழுதி பறக்க மருமகள் வந்து கொண்டிருக்கும்,'
34. தன் அரவணைப்பில், தன் அன்பில், தனது கண்ணீரில், தனது ஒட்டுதலில் அவளை இருத்திக் கொள்வதையே தன் கடமையாக ஏற்றுக் கொண்டாள்’’

## பகுதி - நான்கு

### பிரிவு - 1

**அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக:** **2X4=8**

35. இறைவனின் இயல்புகளாகத் தாயுமானவர் தெரிவித்துள்ளதை யாவை?
36. பெரியாரைத் துணைக்கோடல் தலைப்பில் திருவள்ளுவர் எவ்வாறு விவரித்துள்ளார்?
37. மீனாட்சியம்மையின்
 பெருமைகள் ஆசிரியர்
 கூறுவனவற்றை விவரி

### பிரிவு - 2

**ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக:**

**2X4=8**

38. காளத்தி மலையில் அமர்ந்த ஈசனுக்கு ஆளாகக் கருதிய

பட்டினத்து அடிகள் கூறிய கருத்துக்களை எழுதுக:

39. ஆதிவியாசர் பாரதத்தை ஒட்டித் துரௌபதையைப் பெண்ணுரிமைக்குக் குரல் கொடுக்கும் நாயகியாகச் சிறப்பிக்கும் பாங்கினை விவரி?

40. . பசவண்ணரின் சிந்தித்துச் செயல்படும் தன்மையை ஊதியத்துடன் விளக்குக .

**பிரிவு - 3**

**இ. ஏதேனும் ஒன்றனுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழு: 1x4=4**

41. ''காய்ச்சலால் அவதிப்படும் தன்னுடைய குழந்தையையும் தோட்டியின் மகளையும் ஒப்பிட்டுப் பார்த்து பாலு எண்ணியவற்றை எழுதுக :

42. மருமகள் வார்த்தைகளால் சேமலையப்பன் அடைந்த துன்பத்தை விவரித்து எழுதுக:

## பகுதி - ஐந்து

**அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக: 1X5=4**

43. ''....வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே!.... ''

அல்லது

44. ''என் ஆசைக்களை
பாறைமேல் முளைக்கும் புற்களைப் போல்
வேகமாக உலர்ந்து போகவிடாதே ''

**ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக: 4X2=8**

45. சேர்த்து எழுதுக:

அ. தேர்+ஓட்டம்
ஆ. சொந்தம்+காரன்

46. பிரித்தெழுதுக :

அ. இவ்வுண்மை
ஆ. திசையெட்டும்

47. எதிர்ச்சொல் எழுதுக.:

அ. துலங்குக X
ஆ. உலர்ந்து X

48. இலக்கணக் குறிப்பு எழுதுக:

அ. வைரமணி
ஆ. தினந்தினம்

49. கீழ் வரும் தொடர்களில் உள்ள மரபுப் பிழைகளைத் திருத்தி எழுதுக:

அ. அம்பு வீசிமான்குட்டியைக் காயப்படுத்தினான்.
ஆ. தோட்டத்தில் உள்ள வாழச் செடி பார்க்க அழகாக உள்ளது .

50. கீழ்வரும் தொடர்களை படித்து பொருள் உணர்ந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

அ. ஊண்
ஆ. பரி

51. பின்வரும் வாக்கியத்தை அடைப்பிற்குள் கேட்டுள்ளவாறு மாற்றி எழுதுக:

அ. பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் மூடநம்பிக்கைகளை எதிர்த்து போராடினார். (நிகழ் கால, எதிர்கால வாக்கியமாக மாற்றுக):

## பகுதி - ஆறு

### பிரிவு - 1

**அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக:**
**1X5=5**

52. உடல் உறுப்பு தானம்
அவசியம் மற்றும்.
தற்போதைய நிலை
53 .உலக மக்கள் தொகை
விழுக்காடு மிகுந்தும்
முன்னேற்றம்
குறைகிறது .

## பிரிவு - 2

**ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக:**
**1X4=4**

54. உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக:

அல்லது

55. தமிழில் மொழி பெயர்த்து எழுதுக:

1. Education is the greatest weapon of all time.
2. Water is the most essential, perishable, and precious resource on earth
3. The Indian Army is the last of India that contributes itself to the safety and unity of India.
4. Sports helps improve our health, and keeps us fit and active. 8